சுருக்கம்

குழு – பொதுப்பணித் துறை –சென்னை மற்றும் புறநகர் பகுதிகளின் ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் – சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி அகற்ற நடவடிக்கை எடுத்தல் – மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் வீட்டு வசதி) அவர்களின் தலைமையில் குழு அமைத்தல் –ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி(கே)த் துறை

அரசாணை (நிலை) எண். 201 நாள் 10.06.2008
வைகாசி 28,
திருவள்ளுவர் ஆண்டு 2039
படிக்கவும்

நீதிப் பேராணை மனு எண்கள். 25776/06 மற்றும் 17915/93 இல் சென்னை உயர்நீதிமன்றத்தின் 04.10.2007 நாளிட்ட தீர்ப்பு.

* * * * *

**ஆணை:**

ஏரிகளில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களை அகற்ற வேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்றம் 4.10.2007இல் உத்தரவிட்டு, அதன் அடிப்படையில் அதிகாரிகள், ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர். அப்படி அகற்ற முயற்சிக்கின்ற நேரத்தில் அங்கே வாழ்கின்ற மக்கள் கிளர்ச்சி மற்றும் போராட்டம் நடத்துகிறார்கள்; நீதிமன்ற உத்தரவு இருப்பதைத் தெரிந்தோ, தெரியாமலோ போராட்டம் நடத்தும் மக்களுக்கு சில அரசியல் கட்சிகளும் துணைபோகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்நிலையில், சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களின் ஏரிகளில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களை அகற்றக் கூடாது என்று போராட்டம் நடத்துவது குறித்தும், அந்த ஏரிகளில் குடியிருக்கும் மக்களின் பிரச்சினை குறித்தும் 19.5.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைச்சர்களுடனும் மற்றும் துறைகளின் அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்து, ஏரிகளை ஆக்கிரமிப்பு செய்து வாழ்கின்ற ஏழை மக்களுக்கு உதவி செய்வதற்காகவும், அதே நேரத்தில் நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்றுகின்ற முறையிலும் அதிகாரிகள் எப்படி நடந்துகொள்வது என்பதைப் பற்றி முடிவெடுக்க வருவாய்த் துறை அமைச்சர் தலைமையில் குழு ஒன்றினை உடனடியாக அமைக்க கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

2. இம்முடிவிற்கிணங்க, மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் வீட்டு வசதி) அவர்களின் தலைமையில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றினை அமைத்து அரசு ஆணையிடுகிறது: –

அமைச்சர் (வருவாய் மற்றும் வீட்டுவசதி) – தலைவர்

சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர்– உறுப்பினர்

மாண்புமிகு திரு. ட்டி.ஆர். பாலு,
மத்திய கப்பல் மற்றும்
தரைவழி போக்குவரத்து
துறை அமைச்சர் மற்றும்
தென் சென்னை
நாடாளுமன்ற உறுப்பினர் – அலுவல் சார்பற்ற உறுப்பினர்

மாண்புமிகு திரு. தா.மோ.அன்பரசன்
தொழிலாளர் நலத் துறை அமைச்சர்
மற்றும்சட்டமன்ற உறுப்பினர்,
ஆலந்தூர் தொகுதி – அலுவல் சார்பற்ற உறுப்பினர்

திரு. செ. குப்புசாமி
வட சென்னை நாடாளுமன்ற
உறுப்பினர் – அலுவல் சார்பற்ற உறுப்பினர்

திரு. ஆ. கிருஷ்ணசாமி
ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற
உறுப்பினர் – அலுவல் சார்பற்ற உறுப்பினர்

திரு. எஸ்.ஆர். இராஜா,
சட்டமன்ற உறுப்பினர்,
தாம்பரம் தொகுதி – அலுவல் சார்பற்ற உறுப்பினர்

திரு. ப. ரங்கநாதன்,
சட்டமன்ற உறுப்பினர்,
வில்லிவாக்கம் தொகுதி – அலுவல் சார்பற்ற உறுப்பினர்

திரு. டி. சுதர்சனம்,
சட்டமன்ற உறுப்பினர்,
பூந்தமல்லி தொகுதி – அலுவல் சார்பற்ற உறுப்பினர்

திரு. இ.ஏ.பி. சிவாஜி,
சட்டமன்ற உறுப்பினர்,
திருவள்ளூர் தொகுதி – அலுவல் சார்பற்ற உறுப்பினர்

செயலாளர்,
பொதுப்பணித்துறை –உறுப்பினர்

செயலாளர்,
வருவாய்த் துறை –உறுப்பினர்

மாவட்ட ஆட்சியர்,
சென்னை –உறுப்பினர்

மாவட்ட ஆட்சியர்,
காஞ்சிபுரம் –உறுப்பினர்

மாவட்ட ஆட்சியர்,
திருவள்ளூர் –உறுப்பினர்

தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை,
சென்னை மண்டலம், சென்னை – 5 – உறுப்பினர்–செயலாளர்

3. இக்குழு, ஏரிகளை ஆக்கிரமிப்பு செய்து வாழ்கின்ற ஏழை மக்களுக்கு உதவி செய்யவும், நீதி மன்ற உத்தரவை நிறைவேற்றுகின்ற முறையிலும், ஆக்கிரமிப்பை அகற்றும் பணிகளில் அதிகாரிகள் எப்படி நடந்துகொள்வது என்பதைப் பற்றியும், ஆக்கிரமிப்பு செய்துள்ள மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்க ஆவன செய்யும்.

4. இக்குழுவின் உறுப்பினர் செயலாளரான தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம் அவர்கள் இக்குழுவிற்குத் தேவையான தகவல்களை அளித்து, கூட்ட நடவடிக்கைகளை ஒருங்கினைத்து அறிக்கையினை அவ்வப்போது அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

( ஆளுநரின் ஆணைப்படி )

எஸ். ஆதிசேஷையா
அரசு செயலாளர்

பெறுநர்

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர், சென்னை – 9
மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு, மத்திய கப்பல் மற்றும்
தரைவழி போக்குவரத்து துறை அமைச்சர் மற்றும்
தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்,
எண். 28. யூனைட்டட் இந்தியா காலனி, முதலாவது குறுக்குத் தெரு,
கோடம்பாக்கம், சென்னை – 24.
மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மற்றும்
சட்டமன்ற உறுப்பினர், ஆலந்தூர் தொகுதி, சென்னை – 9.
திரு. செ. குப்புசாமி , வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்,
எண். 8, நந்தனம் காலனி, டவர் பிளாக், நந்தனம், சென்னை – 35
திரு. ஆ. கிருஷ்ணசாமி, ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர்,
எண். 34, முதலாவது தெரு, சிவானந்தா நகர்,அம்பத்தூர், சென்னை – 53.
திரு. எஸ்.ஆர். இராஜா, சட்டமன்ற உறுப்பினர், தாம்பரம் தொகுதி,
எண். 14/17, சீனிவாசன் தெரு, பழைய தாம்பரம், சென்னை – 45
திரு. ப. ரங்கநாதன், சட்டமன்ற உறுப்பினர், வில்லிவாக்கம் தொகுதி,
எண். 37/13, முதல் பிரதான சாலை, ஜவகர் நகர், அகரம், சென்னை – 82
திரு. டி. சுதர்சனம், சட்டமன்ற உறுப்பினர், பூந்தமல்லி தொகுதி,
எண். 23, செங்கல்வராயன் தெரு, செனாய் நகர், சென்னை – 30
திரு. இ.ஏ.பி. சிவாஜி, சட்டமன்ற உறுப்பினர், திருவள்ளூர் தொகுதி
எண். 108, பூந்தமல்லி நெருஞ்சாலை, ஒண்டிக் குப்பம், மணவாள நகர், திருவள்ளூர் – 2
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5
செயலாளர், பொதுப்பணித்துறை, சென்னை – 9
செயலாளர், வருவாய்த் துறை, சென்னை – 9
மாவட்ட ஆட்சியர், சென்னை – 1
மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம்
மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர்
(தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம்,
சென்னை – 5 மூலமாக)
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம், சென்னை – 5.
நகல்
முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9
வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை – 9
தொழிலாளர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9
தேசிய தகவல் தொடர்பு மையம், தலைமைச் செயலகம், சென்னை – 9
(இணையதளத்தில் வெளியிடுவதற்காக)

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்